සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

| | |
|---|---|
| මධ්‍ය වාර්ෂික පරීක්ෂණය - 2015<br>அரையாண்டுப் பரீட்சை 2015<br>Mid Term Test 2015 | 07 ශ්‍රේණිය<br>தரம் 07 |
| භූගෝල විද්‍යාව I, II<br>புவியியல் I, II<br>Geography I, II | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம் |

பாடசாலையின் பெயர்:………………………………………………………………… தரம்:……………

மாணவர் பெயர்:……………………………………………………… சுட்டெண்

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
- **இலக்கம் 01 தொடக்கம் 05 வரையான வினாக்களுக்கு சரியான விடையை தெரிவு செய்து கோடிடுக.**

01. இலங்கைக்கு தென்மேல் பருவப்பெயர்ச்சி காற்றின் மூலம் மழை கிடைப்பது
    i. மார்ச் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை காலங்களில்
    ii. மே மாதம் முதல் செப்தெம்பர் மாதம் வரை காலங்களில்
    iii. ஓக்டோபர் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை
    iv. டிசம்பர் மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரை
02. இலங்கையில் அதிகளவு மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணமாவது
    i. சப்ரகமுவ மாகாணம் ii. தென்மாகாணம்
    iii. வட மாகாணம் iv. மேல் மாகாணம்
03. பூகோளத்தில் கிழக்கு மேற்காக வரையப்பட்ட வட்ட வடிவான கற்பனைக் கோடு அல்லாதது.
    i. கடகக் கோடு ii. அகலாங்கு
    iii. மகரக் கோடு iv. கிறீன்விச் கோடு
04. கடல் மட்டத்திலிருந்து உயர்ந்து செல்லும் ஒவ்வொரு 100 மீற்றருக்கும் குறைந்து செய்யும் வெப்ப நிலையின் அளவானது
    i. $0.64C^0$ ii. $0.46C^0$ iii. $1.64C^0$ iv. $1.46C^0$
05. + - - + - - + இந்த குறியீட்டின் மூலம் காட்டப்படுகின்ற நிர்வாக எல்லையை குறித்து நிற்பது
    i. கிராம சேவகர் பிரிவு எல்லை
    ii. பிரதேச செயலகப் பிரிவு
    iii. மாவட்ட எல்லை
    iv. மாகாண எல்லை

- **இலக்கம் 06 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான சொல்லை இட்டு இடைவெளி நிரப்புக.**

06. நாற்புறத்திலும் நீரினால் சூழப்பட்ட நிலப்பகுதி ……………………அழைக்கப்படும்.
07. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் குறுகிய காலத்தில் வளிமண்டலத்தில் ஏற்படும் நிலமைகளை ………………………… அழைக்கப்படும்.
08. மத்திய மலைத்தொடரில் மேற்குப் பள்ளத்தாக்கு அதி கூடிய மழை வீழ்ச்சி கிடைக்கப் பெறுவது …………………………மழையினாலாகும்.
09. சகாராப் பாலைவனம் அமையப்பெற்றுள்ளது ……………………கண்டத்திலாகும்.

10. இலங்கையில் எஞ்சியுள்ள ஒரேயொரு இயற்கை வனமானது............................ வனமாகும்.

- இலக்கம் 11 முதல் 15 வரை தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் முன்னால் காணப்படும் அடைப்புக்குறிக்குள் புள்ளடி இடுக.

11. மழை நீரை சேமித்து வைத்தல் நீர் பற்றாக்குறைக்கு தீர்வாகும் ( )
12. குப்பைகளை முறையான முறையில் முகாமைத்துவம் செய்வதனால் நகர சூழல் பாதுகாப்புக்கு சாதகமாக அமையும். ( )
13. இலங்கையில் தேயிலை பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது ஒல்லாந்தர்களினாலாகும். ( )
14. இலங்கைக்கு சுற்றுலா பயணிகள் அதிகளவில் வருகை தருவது நவம்பர் மாதம் தொடக்கம் மார்ச் மாதம் வரையாகும். ( )
15. இலங்கை நாட்டினுள் நீர்தேக்கங்களில் செய்கின்ற மீன்பிடித் தொழிலை உவர் நீர் மீன்பிடித் தொழில் என அழைக்கப்படும் ( )

- **இலக்கம் 16 முதல் 20 வரையான வினாக்களில் x பகுதியிலுள்ள வாக்கியங்களுக்கு பொருத்தமான விடையை y பகுதியிலிருந்து தெரிவு செய்து இணைக்குக.**

| X | y |
|---|---|
| 16. தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள பிரதேசம். | அம்பலாங்கொடை |
| 17. உள்ளாச பயணிகளை கவரும் இடம். | தலவாக்கலை |
| 18. சுதந்திர வர்த்தக வலயமாகும். | கொக்கலை |
| 19. முக மூடி தயாரிப்பதற்கு பிரசித்தி பெற்ற இடம். | மன்னார் |
| 20. இலங்கைக்கு உரித்தான ஒரு தீவாகும். | ஹிக்கடுவை |

பகுதி- II

- **முதலாம் வினா கட்டாயமானதாகும்**
- **முதலாம் வினா உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

01.

உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் இலங்கை தேசப்படத்தில் கீழ் காணும் இடங்களை புள்ளடியிட்டு பெயரிடவும்.

1. கொழும்பு நகரம்
2. பருத்தித் துறை
3. யாழ்ப்பாணக் களப்பு
4. நுவரெலிய மாவட்டம்
5. தேவேந்திர முனை
6. வெலிகாம் குடா (12 புள்ளிகள்

02.

I. இலங்கையில் பிரிக்கப்பட்டுள்ள பிரதான தரைத்தோற்ற வலயங்கள் மூன்றையும் பெயர் குறிப்பிடவும்.

(03 புள்ளிகள்)

II. மத்திய மலை நாட்டில் காணக் கூடிய பிரதான மலைத்தொடர் இரண்டினதும் மேட்டு நிலங்கள் இரண்டினதும் பெயர் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

III. இலங்கையின் பொருளாதார வளரச்சிக்கு மத்திய மலை நாட்டினால் ஆற்றப்படும் பங்களிப்பனை இரண்டு காரணிகளை முன்வைத்து சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

03.

I. இலங்கைக்கு மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறும் முறைகள் மூன்றையும் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

II. வரண்ட வலயப் பிரதேசங்களில் நீர் பற்றாக் குறைக்கான பாதிப்பை ஏற்படுத்தும் இரண்டு காரணங்களை தருக.

(04 புள்ளிகள்)

III. வரண்ட வலயப் பிரதேசத்தில் வாழும் மக்கள் குடிநீர் பிரச்சினையை தீர்த்துக்கொள்ளும் முறையை சுருக்கமாக விளக்குக.

புள்ளிகள்)

04.

இலங்கையின் பொருளாதாரம் பிரதானமாக விவசாயத்தில் தங்கியுள்ளது.

I. இலங்கையின் விவசாயத்தை வகைப்படுத்தியுள்ள மூன்று பிரிவுகளையும் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

II. விவசாய மூலம் பொருட்களை பயன்படுத்தி செய்யும் உற்பத்தி தொழிற்சாலைகள் நான்கின் பெயரை குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

III. உமது பிரதேசத்தில் ஏற்றுமதி பயிர்செய்யும் பயிர்கள் இரண்டின் பெயர்களை குறிப்பிட்டு இதில் ஒன்றை பற்றி சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

05. இலங்கையில் கடற்கரை அண்டிய நிலப் பிரதேசங்கள் பார்வைக்கு மனம் கவர்ந்த இடங்களாகும்.

I. இலங்கையில் கடற்கரையோர பிரதேசங்களில் காணப்படும் நில அமைப்புக்கள் மூன்றை பெயரிடுக.

(03 புள்ளிகள்)

II. இலங்கையில் முருகைக் கற்பாறைகள் காணப்படும் இரண்டு இடங்களை குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

III. கடற்கரையோர பிரதேசங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக கடைப்பிடிக்க வேண்டிய இரண்டு காரணிகளை குறிப்பிட்டு அதனை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

06.

**I.** இலங்கையில் வெள்ளப்பெருக்கு அபாயங்கள் அதிகளவு ஏற்படும் மாவட்டங்கள் மூன்றின் பெயர்களை எழுதுக.

(03 புள்ளிகள்)

**II.** வெள்ளப் பெருக்கினால் மனிதர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் நான்கை குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

**III.** ஈரவலயத்தில் அதிக மக்கள் தொகையினர் வாழ்வதற்கான இரண்டு காரணங்களை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக

(05 புள்ளிகள்)

**07.**

**I.** இலங்கையில் பொருளாதாரம் தங்கியுள்ள பிரதான மூன்று பிரிவுகளின் பெயர்களை எழுதுக.

(03 புள்ளிகள்)

**II.** இலங்கையின் ஏற்றுமதி பயிர்கள் நான்கின் பெயர்களை எழுதுக.

(04 புள்ளிகள்)

**III.** நீங்கள் வாழும் பிரதேசங்களில் உள்ள மூலப் பொருட்களை பயன்படுத்தி (ஆற்றப்படும் குடிசை) கைத்தொழில் இரண்டை உதாரணங்களுடன் விளக்குக

(05 புள்ளிகள்)

**08.**

**I.** இலங்கையின் சுதந்திர வர்தக வலயங்கள் மூன்றின் பெயரை எழுதுக.

(03 புள்ளிகள்)

**II.** இலங்கையில் நகர பிரதேசங்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் நான்கின் பெயர்களை எழுதுக.

(04 புள்ளிகள்)

**III**. மேலே குறிப்பிட்ட பிரச்சினைகள் இரண்டை தீர்த்துக் கொள்வதற்காக உங்களின் ஆலோசனைகளை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

